பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 15 | செவ்வாய்க்கிழமை | 01.10.2024 | அதிர்வு 060

ரி - 56 ரக துப்பாக்கியால்

## பஸ் உரிமையாளர் சுட்டுப் படுகொலை




பஸ் உரிமையாளர் ஒருவர் சுட்டுப் படு கொலை செய்யப்பட் டுள்ளார்.

06









# கூட்டாகப் போட்டியிட முயற்சி எடுப்போம்!

## தமிழரசு, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சிகள் கொழும்பில் நேற்று இந்தியத் தூதுவரிடம் தெரிவிப்பு



"கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டபோது எங்களுக் குக் கசப்பான அனுபவங்கள் உள்ளன. இருந்தாலும் அவை தொடர்பில் பேசி கூட்டாகப் போட் டியிட முயற்சிகள் எடுப்போம்."

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் நேரில் தெரிவித்த னர் தமிழரசு, ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளின் தலை வர்கள்.

06

## புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுடன் நாம் இணைந்து பணியாற்றுவோம்

### இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கும் என்றும் தூதுவர் சந்தோஷ் ஜா உறுதி



"இலங்கையின் புதிய ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து நாம் பணியாற்றுவோம். இலங்கையின் அபிவிருத்திக்கு இந் தியா தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கும்."

- இவ்வாறு இலங்கைக்கான இந்தி யத் தூதுவர் சந்தோஷ் ஜா

06

## எரிபொருள் விலை குறைப்பு!

### மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை



மாதாந்த விலைச் சூத்தி ரத்தின் பிரகாரம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலை யில் திருத்தம் செய்யப்பட் டுள்ளது என்று இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தா பனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 பெற் றோல் லீற்றர் ஒன்றின் விலை 21 ரூபாவால் குறைக்கப்பட் டுள்ளது. அதன் புதிய விலை 311 ரூபாவாகும்.

06




இப்போது நாட்டில் ஐந்து முன்னாள் ஜனாதி பதிகள் இருக்கிறார்கள். சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே அவர்க ளாவர்.

இவர்களில் எவரும் வரும் நாடாளுமன் றத் தேர்தலில் களமிறங்கப் போவதில்லை என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. சந்திரிகா குமார தூங்க ஏற்கனவே தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி விட்டவர். ஜனாதிபதி பதவியை பறி கொடுத்த பின்னர் கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து எம். பி ஆக இருந்து வந்த மஹிந்த ராஜபக்ஷ வயது மூப்புக் காரணமாக இந்த தடவை தேர்தலில் குதிக்க மாட்டார்

06




# ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டி!

(எஸ்.நிதர்ஷன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு இவ்வாறு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்டமைப்பினர் வெளியிடுள்ள அறிக்கையில்,

“இன்று தமிழ் தேசிய களத்தில் தூய்மையான மாற்றத்திற்கான மனிதர்களை மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திற்கு அனுப்ப தமிழ் மக்கள் விரும்புகின்றனர்

இளையவர்களும் பெண்களும் நிபுணர்களும் இந்தகே குழுமத்தில் கணிசமான எண்ணிக்கையில் இருக்க விரும்புகின்றனர். அதேநேரம் தமிழ் தேசிய இனம் தன் உரிமைகளை இன்னும் இத்தீவில் பெற்று கொள்ளாத நிலையில் தியாக வேள்வியை கடந்து இன அழிப்புக்கு உள்ளாகி பரிகார நீதியையும் நிரந்திர சமஷ்டி அடிப்படையிலான தீர்வையும் கோரி நிற்கின்ற சூழலில் கட்சி அரசியலைத் தாண்டி தமிழ்த் தேசியக் கொள்கை அரசியல் தளமே முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

முதிர்ந்த அரசியல் தலைவர்கள் வழிகாட்ட நிபுணத்துவமும் பல் பரிணாம ஆளுமையும் தமிழ்த் தேசிய பற்றுறுதியும் கொண்ட தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் அணி வடக்கு, கிழக்கில் களம் காண வேண்டும் என்பது இன்று தமிழர்கள் அனைவரது வேணவாக இருக்கின்றது.

கோட்பாட்டுத் தளத்தில் தமிழ் மக்கள் பேரவை, தமிழ் மக்கள் பொதுச் சபை என்பவற்றின் கருத்தாணைகளைத் தமிழ்த் தேசிய அரசியல் சித்தாந்தமாக ஏற்றுக்கொண்டு சமகால வாழ்வியல் விடயங்களையும் உள்வாங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தை இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர்கள் அணியினர் கொண்டிருப்பர்.

இதற்காக வடக்கு, கிழக்கு தழுவிய தூய தமிழ்த் தேசிய முகங்களை தொகுதி வாரியாக அனைத்து சமத்துவ பிரதிபலிப்புக்களுடன் கண்டறிய உதவுமாறு அனைத்து தமிழ் மக்களுக்கும் அறைகூவல் விடுகின்றோம்.

அனைத்து சிவில் சமுக பிரதிநிதிகள் பல்கலைகழக சமூகம் மாதர் அமைப்புகள் தொழிற்சங்கங்கள் அரசியல் இயக்கங்கள் இதில் தங்கள் பங்களிப்பை இதயசுத்தியுடன் ஆற்ற முன்வருமாறு வேண்டுகின்றோம்

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் அடுத்த வாரம் எதிர்நோக்கி இருக்கின்ற இந்த தருணத்தில் வடக்கு, கிழக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வன்னி, அம்பாறை தேர்தல் மாவட்டங்களை சார்ந்த ஊழலற்ற மதுபோதை வணிகங்களுடன் சமூக பிறழ்வு நடத்தைகளுடன் எவ்விதத்திலும் தொடர்புபடாத தமிழ்த் தேசியத்திலும் தமிழ் மக்கள் வாழ்வியல் மேம்பாட்டிலும் பற்றுதியான கறைபடியாத மாற்றத்திற்கான தூய தமிழ்த் தேசிய முகங்களை பரிந்துரை செய்யுமாறு வேண்டுகின்றோம். அவர்கள் மக்கள் மன்றில் வெளிப்படுத்தப்பட்டு தமிழ் சிவில் கட்டமைப்புக்களின் ஒப்புதலுடன் பட்டியல் இறுதியாக்கப்படும்.

அவர்கள் தமிழ்த் தேசிய நலனை முன்னிறுத்தும் பொது வேட்பாளர்களாக நாடாளுமன்ற தமிழ் மக்கள் பிரதிநிதித்துவத்திற்கான தேர்தலை எதிர்கொள்வர்.

கட்சி அரசியலைக் கடந்த இந்த திட்ட முன்மொழிவுக்கு அனைத்து தமிழர்களது ஆதரவையும் பங்குபற்றுதலையும் வேண்டி நிற்கின்றோம்.” – என்றுள்ளது.



# ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் ஹேரத்துக்கு அருட்கலாநிதி சந்துரு வாழ்த்துத் தெரிவிப்பு









புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ் சந்துரு பெர்ணாண்டோ வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்ட அநுரகுமார திஸநாயக்கவுக்கு அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் சார்பில் அதன் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். இந்தத் தேர்தல் இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தேர்தலாகும். அமைதியான நேர்மையான முறையில் நடந்து முடிந்த தேர்தலானது ஒன்றுபட்ட இலங்கை மக்கள் எதிர்பார்த்த மாற்றம் நடந்தேறியிருப்பது ஜனநாயகத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அரியணையில் ஏற்றிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை ஆசிர்வதிப்பாராக.

ஜனாதிபதியுடன் பிரதமராக நியமிக்கப்பட்ட ஹரிணி அமரசூரியவுக்கும் நாட்டுக்கும் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது. அவரையும் ஆண்டவர் ஆசிர்வதிப்பாராக!

இவர்களுடன் அமைச்சர் விஜித ஹேரத்தும் கிடைத்த இந்த வாய்ப்பை நன்றாக பயன்படுத்தி நாட்டு மக்களுக்கு சிறப்பான சேவையாற்றுவார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அவரையும் ஆண்டவர் ஆசிர்வதிப்பாராக.

# பொதுத் தேர்தலின் பின்னரே மானியம் வழங்கத் தீர்மானம்




பெரும்போகத்தின் போது, விவசாயிகளுக்கு 25,000 ரூபா கொடுப்பனவும், மீனவர்களுக்கு எரிபொருள் மானியமும் வழங்குவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எடுத்த தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான மானியத்தை வழங்க தீர்மானித்ததன் மூலம் ஏனைய வேட்பாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த சனிக் கிழமை கூடிய போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பொதுத் தேர்தலின் பின்னர் மேற்படி கொள்கைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

# வருமான வரி செலுத்துவதற்கான கால அவகாசம் நேற்றுடன் நிறைவு

2023 - 2024 ஆம் நிதியாண்டுக்கான வருமான வரி செலுத்துவதற்கான கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரிகளை செலுத்த தவறும் நபர்களுக்கு எதிராக உள்நாட்டு இறைவரி சட்ட நியதிகளுக்கு அமைவாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களிடமிருந்து வரிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கடுமையான வரி சேகரிப்பு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஒருவர் வரியைச் செலுத்தத் தவறினாலோ அல்லது தாமதமாகச் செலுத்தியதற்காக அபராத வட்டி விதிக்கப்படும் என்பதுடன், அறவிடப்படும் அபராதத் தொகை அல்லது வட்டித் தொகை குறைக்கப்பட மாட்டாது எனவும் உள்நாட்டு




இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், நிலுவையில் உள்ள அனைத்து இயல்பு நிலை வரிகளையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் செலுத்துமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டப்ள்யூ.ஏ.சேபாலிகா சந்திரசேகர கோரியுள்ளார்.

# பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை இன்று முதல் அனுப்பலாம்




எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த பணிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்தநிலையில், கடந்த ஜனாதிபதி தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பித்த அனைவரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவசியம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தகுதியான அனைத்து விண்ணப்பதாரிகளும், விண்ணப்பங்களை எதிர்வரும் 8 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக தமது மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் கையளிக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் 11ஆம் திகதி நண்பகல் 12 மணிவரையில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், 2024ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் பெயர் பட்டியலுக்கமைய இந்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும்.

இதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் தபால் திணைக்களத்திற்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

தபால் வாக்கு பாதுகாப்பு பொதியைக் கையாளும் முறைமை, மற்றும் அதற்குரிய காலப்பகுதி என்பன இதன்போது தீர்மானிக்கப்படவுள்ளன.

அத்துடன் உத்தியோப்பூர்வ வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களின் வீடுகளுக்கு விநியோகிக்கும் வழிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# இரவில் இடியுடன் கூடிய கனமழை பெய்யும் சாத்தியம் பற்றி எச்சரிக்கை




நாட்டின் பல பகுதிகளில் இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி மேல், சபரகமுவ, தென், மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

# எழுத்தூர் சந்தியில் திறக்கப்பட்ட மதுபானசாலையை உடன் மூடுமாறு மதுவரி ஆணையாளர் உத்தரவு




(ந.லோகதயாளன்)

மன்னார், தலை மன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை மக்களின் எதிர்ப்பு காரணமாக உடனடியாக தற்காலிகமாக மூடுமாறு மதுவரித் திணைக்கள ஆணையாளர் எழுத்தில் உத்தரவிட்டுள்ளார்

எழுத்தூர் மதுபானசாலை தொடர்பில் நேற்று ஒன்றுகூடிய மக்கள் பிரேதப் பெட்டி சகிதம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்த மதுபானசாலை அமைந்துள்ள பகுதியில் மக்களின் குடியேற்றம், இளைஞர் பயிற்சி நிலையம், காமன்ஸ், பள்ளிவாசல் ஆகியவை காணப்படுகின்றன. இந்தநிலையில் மக்களின் எதிர்ப்பையும் மீறி இங்கு மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது என்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேபோன்று கடந்த மாதம் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்ததோடு, இந்த மதுபானசாலையைத் திறக்க அனுமதிக்க வேண்டாம் எனக் கோரி மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

தொடர்ந்தும் பல்வேறு எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையிலும் மதுபான விற்பனை நிலையம் கடந்த வாரம் திறக்கப்பட்டது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிரேதப் பெட்டியுடன் திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் சென்று மக்களுடன் கலந்துரையாடினார்.

இந்தப் பிரச்சினையை அரச அதிபர் உடனடியாக மதுவரித் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் எழுத்தூர் மதுபானசாலையைத் தற்காலிகமாக மூடுமாறு பணிக்கப்பட்டுள்ளது

இதேநேரம் நிரந்தர தீர்வு கோரி ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று மதுபானசாலையை நிரந்தரமாக மூடுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

# வடக்கில் மதுச்சாலைகளுக்கு வழங்கப்பட்ட பெர்மிட்டுகள் குறித்து மீளாய்வு செய்யுங்கள்!

## ஜனாதிபதிக்கு மொட்டுப் பிரமுகர் கீதநாத் கடிதம்



வடமாகாணத்தில் மதுபானசாலைகளுக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை மீளாய்வு செய்யவும், தேவையற்ற மதுபானசாலைகளை மூடவும், எமது சமூகங்களின் - குறிப்பாக இளைஞர்களின் - நல்வாழ்வை பாதுகாக்குமாறும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு உறுப்பினர் கீதாநாத் காசிலிங்கம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடு சந்தி வரையான பாதையில் அண்மைய வருடங்களில் இவ்வாறான மதுபானசாலைகள் குறிப்பிடத்தக்க அளவில் தோன்றியுள்ளன என அவர் கூறினார்.

"கடந்த ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்தில், குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளின் ஆதரவைப் பெறுவதற்காக இந்த மதுபான அனுமதிப்பத்திரங்கள் பல வழங்கப்பட்டன என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

சமீப காலமாக புதிய மதுபானசாலைகள் தோன்றியதால், அன்றாடம் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான மக்கள் தினசரி கூலி வேலை செய்பவர்களைக் கொண்டுள்ளனர், மேலும் மதுக்கடைகளின் பெருக்கம் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும். பல குடும்பங்கள் சிரமப்படுகின்றனர், அவர்களின் வருமானத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நான் அவர்களிடம் தனிப்பட்ட முறையில் பேசினேன்.

எங்கள் சமூகங்களின், குறிப்பாக இளைஞர்களின் நல்வாழ்வைப் பாதுகாக்க, தேவையற்ற மதுபானசாலைகள் தொடர்பில் மதிப்பாய்வு செய்து மூடுவதற்கு இந்த விஷயத்தில் உங்கள் தலையீட்டை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த உரிமங்கள் அரசியல் ஆதாயங்களுக்காக மட்டுமே விரைவாக வழங்கப்பட்டன, குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளுக்கு மட்டுமே பயனளிக்கின்றன, மேலும் குடிமக்களுக்கு இது ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கங்களைக் கருத்தில் கொள்ளவில்லை.

ஜனாதிபதி அவர்களே! இந்த பிரச்சினையை விரைவில் தீர்த்து, இந்த உரிமங்கள் ஏன் இந்த அரசியல்வாதிகளால் வழங்கப்பட்டன மற்றும் சமூகங்களுக்கு எந்த நன்மையும் இல்லாமல் ஏன் வழங்கப்பட்டன என்பதை விசாரிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" - என்று அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எனத் தெரிகிறது.

இதேபோல மைத்திரிபால சிறிசேன, கோட்டபாய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் நடக்கப் போகின்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என்றும் ஒதுங்கி இருக்க முடிவு செய்து இருக்கின்றனர் எனத் தெரிகிறது.

இதே சமயம் ராஜபக்ஷ குடும்பத்தில் இம்முறை ஷசீந்திர ராஜபக்ஷ தவிர வேறு ராஜபக்ஷர்கள் பொதுத் தேர்தல் களத்தில் இறங்க மாட்டார்கள் என்று தெரிகிறது.

அவர்களில் மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளராக இருக்கும் நாமல் ராஜபக்ஷ கூட இம்முறை தேர்தலில் குதிக்காமல் பின்னணியில் இருந்து கட்சியை வெற்றி பெறச் செய்வதற்குப் பாடுபடுவார் என தமக்கு நெருக்கமானவரிடம் கூறி இருக்கிறார்.

ஒரு மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்டு தோல்வியடைந்தால் ஏற்படக்கூடிய அரசியல் பின்னடைவுகளை எடை போட்ட பின்னரே நாமல் ராஜபக்ஷ நேரடியாக களத்தில் இறங்கும் திட்டத்தை கைவிட்டார் என கருதப்படுகிறது. எல்லா மாவட்டங்களிலும் இருந்தும் கிடைக்கும் வாக்குகள் மூலம் தேசிய பட்டியல் எம்.பியாகஹ் தான் நாடாளுமன்றம் செல்லலாம் என அவர் கருதுகின்றார் எனத் தெரிகிறது

## புதிய ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தைப் பெரிய விமானங்களும் தரையிறங்கக்கூடிய வகையில் விஸ்தரிப்பதற்கு இந்தியா ஆதரவளிக்கும். இதேபோன்று, மன்னார் – இராமேஸ்வரம் படகு சேவையை விரைவாகத் தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்." – என்றும் இந்தியத் தூதுவர் குறிப்பிட்டார்.

இந்தியத் தூதுவரிடம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், "தற்போதைய அரசு அதிகாரப் பகிர்வுக்கு எதிராகவே கடந்த காலங்களில் செயற்பட்டது. அத்துடன், அவர்கள் 13ஆம் திருத்தச் சட்டத்தைத் தொடர்ச்சியாக எதிர்த்து வருபவர்கள். எனவே, அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்." – என்று வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர், "நீங்கள் இதனை எல்லோரும் இணைந்து ஒற்றுமையாகக் கோரவில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு நிலைப்பாட்டைச் சொல்கிறீர்கள்." – என்று கூறினார்.

அவருக்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், "13ஐ நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்குமாறு நாம் இந்தியப் பிரதமரிடம் கடிதம் மூலம் ஒற்றுமையாகக் கோரியுள்ளோம். ஒரேயொரு (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) தரப்பு மட்டுமே அதில் கையொப்பமிடவில்லை." – என்று கூறினர்.

அத்துடன், "மாகாண சபைகளுக்கான தேர்தலையேனும் உடனடியாக நடத்துமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும்." – என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கை வைத்தனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

## எரிபொருள் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று பெற்றோலிய சட்டக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

லங்கா ஒயிட் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 24 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 283 ரூபாவாகும்.

லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 33 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 319 ரூபாவாகும்.

இலங்கை மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 19 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 183 ரூபாவாகும்.

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றதையடுத்து எரிபொருள் விலை, குறைந்தது 50 ரூபாவுக்கு மேல் குறைக்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்திருந்தனர். எனினும், மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

## பஸ் உரிமையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தச் சம்பவம் ஹங்வெல்ல, நெலுவன்துடுவ பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இனந்தெரியாத நபர் ஒருவரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

55 வயதுடைய குடும்பஸ்தரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

ரி – 56 ரக துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## கூட்டாகப் போட்டியிட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை இந்தியத் தூதுவருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு தொடர்பில் அவர்களிடம் இந்தியத் தூதுவர் கேட்டறிந்தார்.

அவருக்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள்,

"நாடாளுமன்றத் தேர்தலைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தனித்தனியாக எதிர்கொள்வதால் வாக்குகள் சிதறடிக்கப்படும். இதனால், பிரதிநிதித்துவத்தை இழக்காத வகையில் ஒன்றாகப் போட்டியிடவே விரும்புகிறோம். எனினும், இது உடனடியாகச் சாத்தியமில்லை. கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டபோது எங்களுக்குக் கசப்பான அனுபவங்கள் உள்ளன. இருந்தாலும் அவை தொடர்பில் பேசி கூட்டாகப் போட்டியிட முயற்சிகள் எடுப்போம்." – என்று கூறினர்.

நேற்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்த இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்திருந்தது. இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்






# குத்துவிளக்குக்குப் பதிலாக சங்குச் சின்னத்தில் போட்டி தமிழரசுக் கட்சியுடனான பேச்சுகளின் பின்னர் தீர்மானம்

## ரெலோ செயலாளரும் முன்னாள் எம்.பியுமான கோவிந்தன் கருணாகரம் தகவல்

(கனகராசா சரவணன் )

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக குத்துவிளக்குக்குப் பதிலாக சங்கு சின்னத்தில் தாங்கள் களமிறங்கவுள்ளனர் எனவும், தமிழரசுக் கட்சியின் அழைப்புத் தொடர்பில் எதிர்காலத்தில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் எனவும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா)தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தையொட்டி நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ளது. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் தமிழ் தேசிய கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி நடந்த ஜனாதிபதி தேர்தலில் சங்கு சின்னத்தில் சந்தித்தோம். இருந்தபோதும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக யாழில் இருண்டு நாள் இடம்பெற்ற கூட்டத்தின் அடிப்படையில் தமிழர்களுக்காக அறிமுகப்படுத்திய சங்கு சின்னத்தின் ஊடாக இந்த பொது தேர்தலை சந்திப்பது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

அந்த வகையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் குத்துவிளக்கு சின்னத்துக்கு பதிலாக சங்கு சின்னத்தை மாற்றி எடுப்பதற்கான வேண்டுகோள் தேர்தல் ஆணையத்துக்கு விடுக்கப்பட்டுள்ளது. அதற்கான முடிவு இரு தினங்களில் கிடைக்கும்.

தெற்கிலே ஊழல் அற்ற ஓர் அரசாங்கத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற ரீதியில் தெற்கு மக்கள் பெருவாரியாக வாக்களித்து ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளனர். அதே வேளை வடக்கு, கிழக்கிலும் கணிசமான வாக்குகள் கிடைத்துள்ளன. அதன் பிரகாரம் நாடாளுமன்றத்திற்கு புது முகங்கள் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் இங்கும் வலுப்பெற்றுள் ளதுடன் தேசிய மக்கள் சக்தியை நோக்கி எங்கள் மக்களும் நகர்வதையும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

எனவே தமிழ் மக்கள் ஒன்றை உணர்ந்து கொள்ளவேண்டும். தெற்கில் இருக்கும் பிரச்சினை வேறு. வடக்குக் கிழக்கில் இருக்கும் பிரச்சினை வேறு. தெற்கிலுள்ள சிங்கள மக்களுக்கு தேவையானது வேறு. எமது மக்களுக்குத் தேவையானவை வேறு. எங்கள் மக்கள் 7 தசாப்தங்களுக்கு மேலாக அரசியல் ரீதியாக எங்களது உரிமைகளை பெறுவதற்கு போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்த வகையில் இதுவரை தீர்வு வரவில்லை

தேசிய மக்கள் சக்தியால் கூட அந்த தீர்வு கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கின்றது. தற்போதைய ஜனாதிபதி தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு எதுவிதமான காத்திரமான கருத்துக்களை கூறவில்லை. கோட்டா ஜனாதிபதியாக வந்தவுடன் அநுராதபுரத்தில் சத்தியப்பிரமாணம் எடுக்கும் போது தான் சிங்கள பௌத்த ஜனாதிபதி என்றார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதியின் சுயரூபம் பற்றி மக்களுக்கு தெரியாது. ஓர் இனவாதி இனவாதம் பேசவேண்டிய தேவை இல்லை. அவர் இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஊடக தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்க கூடாது என களத்தில் நின்று போராடிய ஒரு போராளி. எனவே அவரது மன நிலை எப்படி இருக்கும் என்பதை தமிழ் இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் இளைஞர்களை புது முகங்களை வரவேற்கின்றோம். நாங்கள் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என ஆசைப்பட்டு ஆயுதம் தூக்கி விடுதலைக்காக போராடியவர்கள் அல்லர். நாங்கள் சந்தியிலே சாரம் இல்லாமல் செத்துக்கிடப்பதற்காகதான் ஆயுதம் தூக்கினோம். நாடாளுமன்ற கதிரைகளுக்கு ஆசைப்பட்டு போராட்டத்துக்குப் போனவர்கள் அல்லர்.

இருந்தபோதும் துரதிஷ்டவசமாக மக்களுக்காக அரசியலில் நிற்கவேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது. எனவே இளைஞர்கள், புதுமுகங்கள் வரவேண்டுமா? எமது மக்களது உரிமையை பெறுவதற்கு அரசியல் ரீதியாக போராடுவதற்கு நீங்கள் தயாரா? தமிழ் தேசியபற்றுள்ளவர்கள், படித்த பண்பான மற்றும் தேர்தலில் வெல்லக்கூடிய யுவதிகள், இளைஞர்கள் இருக்கின்றீர்களா? முன்வரவும்.

வெறுமனவே சமூக வலைத்தளங்களிலும் ஏனைய ஊடகங்களில் இளைஞர்களுக்கு இடம் கொடுங்கள், நீங்கள் ஒதுங்கி கொள்ளுங்கள் என எழுத்து மூலமாக எழுதுவதால் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனவே முன்வாருங்கள். உங்களுக்கு பின்னால் இருந்து வழி நடத்த நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எனவே தமிழ் மக்கள் உரிமைகள் பெறப்படவேண்டும். அவர்கள் நிம்மதியாக இணைந்த வடகிழக்கில் சுயாட்சியுடன் சுயநிர்ணய உரிமைகளை பெற்று வாழவேண்டும் என்பதற்காக எங்களை நாங்கள் அர்ப்பணித்தவர்கள். நாங்கள் எப்போதும் விட்டுக் கொடுப்புக்கு தயாரக இருக்கின்றோம். எனவே இளைஞர், யுவதிகளே! தேசிய கட்சிகளின் அலைக்கு பின்னால் இழுபட்டுச் செல்வீர்களானால் எங்களுடைய மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் மாத்திரமல்ல, சூனியமாகும். உணர்ந்து கொள்ளவேண்டும்.– என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கூத்தடித்தால்...!

தத்தமது பதவிக் காலங்களில் அதிகார மிடுக்குத் தலைக்கேற தலைகால் புரியாமல் கூத்தடிப்பவர்கள், அதிகாரத்தை விட்டு இறங்கிய பின்னர் தாம் முன்னர் செய்த தவறுகளுக்கெல்லாம் பொறுப்புக் கூற வேண்டிய இக்கட்டில் சிக்குவார்கள்.

அத்தகைய அரசியல் போக்கு இலங்கையிலும் அவ்வப்போது தலைகாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

1970 முதல் 1977 வரை அதிகாரத்திலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசில் இடம்பெற்றவர்கள் இப்படி அதிகார மிடுக்கேறியமையினால் ஆடிய ஆட்டங்களுக்காக, அதற்குப் பின்னர் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியவர்களானார்கள். பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா கூட இந்த அரசியல் தவறுகளுக்கான நெருக்கடிகளை எதிர்கொள்ளாமல் தப்பி விட முடியவில்லை. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூட அந்த அதிகார தவறிழைப்புகளுக்காக தமது குடியுரிமையை ஏழு ஆண்டுகளுக்கு இழக்க வேண்டியவரானார்.

சுமார் இரண்டரை ஆண்டுகள் மட்டுமே ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, அந்த நேரத்தில் பெரும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டார், சுமூக நிலையை ஏற்படுத்தினார் என்றெல்லாம் தெற்கில் பேச்சடிபட்டது.

ஆயினும் அந்த அதிகாரத்தில் தான் செய்தவை, செய்யாதவை எல்லாவற்றுக்குமாகவும் அவரும் சில பல சிக்கல்களை - நெருக்கடிகளை - எதிர்கொள்ள வேண்டியவராகிறார்.

தம்முடைய ஆட்சிக் காலத்தில் தான் செய்தவை, செய்யாமல்விட்டமைபோன்றவற்றிற்காக இதுவரை காலத்தில் அதிகம் நெருக்கடிகளை எதிர்கொண்டவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான்.

தம்முடைய தவறுகள் காரணமாக அதிகாரத்தை விட்டு இறங்கிய பின்னர், தமது வீடு, வாசல்கள், சொத்துக்களை விற்று, அபராதம் - தண்டம் - நஷ்டஈடு போன்றகட்டாயப்படுத்தல்களுக்காக, பல கோடி ரூபா பணத்தை அழ வேண்டியவரானார் அவர்.

அத்துடன் விவகாரம் முடிந்து விடவில்ல. இன்னும், இன்றும் பல வழக்குகளுக்காக அவர் தொடர்ந்து நீதிமன்றங்களின் படிகளை ஏறவேண்டியவராக இருக்கின்றார்.

அதேபோன்ற நிலைமை சுமார் இரண்டரை ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உண்டு என்று இப்போதுத் தோன்றுகின்றது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் பல கோடி ரூபாய்க்குப் பெறுமதியான சூதாட்ட விடுதிகள் - கசினோக்களுக்கு - உரிமங்கள் வழங்கிய விடயத்தில் அரசகட்டமைப்புக்கு பெரும் பின்னடைவுகளை - இழப்பை - ஏற்படுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று தெரிவித்து அவருக்கு எதிராக நீதிமன்றததில் குற்றவழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம் ஆட்சிக்கட்டின் கடைசி ஆறு மாதத்தில் பெரும் எண்ணிக்கையான மதுபான சாலை லைசென்ஸ்களை தமக்கு நெருக்கமானவர்களுக்கு - தங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு - வழங்கியமை மூலம் பெரும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்று ரணில் விக்கிரமசிங்க மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

இத்தகைய வழக்குகள் - நெருக்கடிகள் - இப்போதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஆரம்பித்திருக்கின்றன. அவை மோசமான கட்டத்தை அடைய முன்னர் உரிய பரிகாரங்களை செய்துகொள்ள ரணில் விக்கிரமசிங்க தயாராக இருக்க வேண்டும்.

இல்லையேல் அவைமுற்றி, ரணிலுக்கு வாய்ப்பைப் பாதிக்கச் செய்துவிடும்.

# என்னை சந்திப்பதற்கு சென்னை வரவேண்டாம்

## தொண்டர்களுக்கு உதயநிதி வேண்டுகோள்



"என்னை சந்திப்பதற்காகச் சென்னைக்குப் பயணம் செய்வதைக் கட்சித் தொண்டர்கள் தவிர்க்குமாறு அன்போடும், உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்."

– இவ்வாறு தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"தமிழகத்தின் துணை முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, மறைந்த முதல்வர் கருணாநிதியின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள், என்னை நேரில் சந்தித்து வாழ்த்த வேண்டும் என்ற முனைப்போடு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னைக்கு வருகிறீர்கள். உங்களுடைய அன்பு என்னை நெகிழச் செய்கிறது. அதற்கு என்றும் நன்றிக்குரியவனாக நான் இருப்பேன்.

எனினும், நம் கட்சியின் தலைவர், தமிழக முதல்வரின் கட்டளையின்படி, அவரவர் பகுதிகளில் நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன. எனவே, மக்கள் பணி, கட்சிப்பணியில் தொடர்ந்து கவனம் செலுத்துவோம். என்னை சந்திப்பதற்காக சென்னைக்குப் பயணம் செய்வதைக் கட்சித் தொண்டர்கள் தவிர்க்குமாறு அன்போடும், உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களில் நான் அடுத்தடுத்துச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், நானே உங்களை அங்கே நேரில் சந்தித்து உங்களின் வாழ்த்துகளைப் பெற்றுக் கொள்கிறேன்." என்று அவர் பதிவிட்டுள்ளார்.

# மீனவர்கள் மீதான தாக்குதலை கண்டித்து செருதூர் மீனவர்கள் வேலைநிறுத்தம்





நாகப்பட்டினம், செருதூரைச் சேர்ந்த பைபர் படகு மீனவர்களின் மீது அக்கரைப்பேட்டை விசைப்படகு மீனவர்கள் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து செருதூர் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வேளாங்கண்ணியை அடுத்த செருதூர் மீனவர் கிராமத்தில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற பைபர் படகு மீனவர்கள் மீது அக்கரைப்பேட்டையை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் செருதூரை சேர்ந்த 3 மீனவர்கள் காயமடைந்து நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக அக்கரைப்பேட்டை மற்றும் செருதூர் மீனவர்களுக்கு இடையே நேற்று முன்தினம் இரவு செருதூரில் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு, இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த சம்பவத்தை கண்டித்து, செருதூர் குதி மீனவர்கள் நேற்று ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் 400 பைபர் படகுகள் கடலுக்குச் செல்லாமல் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டன. சுமார் ஆயிரம் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய இழப்பீடு மற்றும் தாக்கிய நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என செருதூர் மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# முதல்வரின் மகன் என்பதை தவிர உதயநிதிக்கு வேறு தகுதி இல்லை

## மத்திய அமைச்சர் எல்.முருகன் தெரிவிப்பு

முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகன் என்பதை தவிர உதயநிதி ஸ்டாலினுக்கு எந்த தகுதியும் இல்லை என்று மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் விமர்சித்துள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக்கப்பட்டது குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள எல். முருகன்,

"குடும்ப அரசியல் நடத்தும் கட்சி தி.மு.க. என்பது மீண்டும் நிரூபனமாகி இருக்கிறது. தி.மு.கவில் கருணாநிதி முதல்வராக இருந்தார். அவருக்குப் பிறகு அவரது மகன் மு.க.ஸ்டாலின் முதல்வராக இருக்கிறார். அவருக்குப் பின் உதயநிதி ஸ்டாலின் முதல்வராவார். அவருக்குப் பின் உதயநிதியின் மகன் முதல்வராவார்.

குடும்ப அரசியல், வாரிசு அரசியல் மீது அவர்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது. உதயநிதி ஸ்டாலின் தற்போது துணை முதல்வராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மு.க.ஸ்டாலினின் மகன் என்பதைத் தவிர வேறு எந்த தகுதியும் இல்லாதவர் அவர். திமுகவில் இருக்கும் பல்வேறு மூத்த தலைவர்கள் தற்போது அதிருப்தியில் இருக்கிறார்கள்.

ஆனால், நமது பிரதமர் நரேந்திர மோடி, நாட்டை கட்டமைக்க அரசியல் பின்னணி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த 10 லட்சம் இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். தொலைநோக்கு சிந்தனை உள்ள தலைவர் ஒருவரின் சிந்தனை எப்படி இருக்கிறது என்பதையும், குடும்ப, வாரிசு அரசியல் செய்பவர்களின் சிந்தனை எப்படி இருக்கிறது என்பதையும் இது காட்டுகிறது." என தெரிவித்தார்.





# இஸ்ரேலுக்கு எதிராக தரைவழி தாக்குதல்களை மேற்கொள்ள ஹெஸ்புல்லா தயாராக உள்ளது

இஸ்ரேல் தொடர்ச்சியாகப் பரந்துபட்ட நிலையில், வான் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் நிலையில், இஸ்ரேலுக்கு எதிராகத் தரைவழி தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தயாராக இருப்பதாக ஹெஸ்புல்லாவின் பிரதி தலைவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலினால் ஹெஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டதன் பின்னர், உயர் அதிகாரி ஒருவர் இதனை உறுதிப்படுத்தினார்.



திட்டமிட்டுள்ள தரைவழி தாக்குதல் நீண்ட நாள்களுக்கு இடம்பெறலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், லெபனான் எல்லைக்கு அருகாமையில் துருப்பினர் வான், கடல் மற்றும் தரை தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தயாராகவுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் ஆயிரத்திற்கும் அதிகமானோர் லெபனானில் கொல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ள நிலையில் பத்து லட்சத்திற்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, லெபனானின் சுகாதார அமைச்சினால் தற்போது வெளியிடப்பட்ட அறிக்கையில், நேற்று முன்தினம் ஐன் அல்-டெல்பில்லில் இஸ்ரேலிய வான் தாக்குதலில் பலியானவர்களின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர, ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.















# ஹெலன் புயல் காரணமாக 90 பேர் வரையில் உயிரிழப்பு

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தைத் தாக்கிய ஹெலன் புயல் காரணமாக மேலும் 90 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய மாநிலம் முழுவதும் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் முடங்கியுள்ளதாகவும், மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதால் பல வீதிகள் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

173 ஆண்டுகளில் அமெரிக்காவைத் தாக்கிய மிக மோசமான சூறாவளியாக ஹெலன் புயல் பதிவாகியுள்ளது.

கடந்த வியாழன் அன்று அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை இந்த சூறாவளி தாக்கியதாகவும், மேற்படி பகுதியில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.











# விக்னேஸ்வரனின் கட்சி தனி வழி போக முடிவு!

(பிரபாகரன் டிலக்சன்)

சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மான் சின்னத்தில் தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் மத்தியகுழுக்கூட்டம்நேற்றையதினம்யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் மத்திய குழுவில் ஆராய்ந்திருந்தோம். ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியுடனோ, இலங்கை தமிழரசுக் கட்சியுடனோ இணைந்து போட்டியிடப் போவதில்லை எனவும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி தனித்து மான் சின்னத்தில் போட்டியிடுவதெனவும் மத்திய குழுவிலே முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் சங்குச் சின்னத்தில் போட்டியிடுவீர்களா என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் எங்களிடம் கேட்டிருந்தனர். இந்நிலையில் சங்குச் சின்னத்தை பயன்படுத்த வேண்டாம் எனத் தமிழ்ப் பொது கட்டமைப்பினர் கூறியுள்ளார்கள்.

தமிழரசுக் கட்சியோடு இணையுங்கள் என சுமந்திரன் கேட்பதால் அங்கு செல்ல முடியாது. சுமந்திரன் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக செயற்பட்டிருந்தார். இந்நிலையில் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையில் இணையுங்கள் என அழைப்பு விடுப்பது முரணானது.

கிழக்கிலே சில கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது பற்றி தீர்மானித்திருக்கின்றோம். எதிர்வரும் நாள்களில் இது தொடர்பில் விரிவாக ஆராய்வோம்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை. யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளராக அருந்தவபாலனை நிறுத்துவது தொடர்பிலும் மத்திய குழுவில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. – எனத் தெரிவித்தார்.

# ஒரு மதுபான பாருக்கான சிபாரிசு கடிதத்தை வைத்து அரசியலாக்குகிறார்கள்; அது என்னை எதுவும் செய்யாது

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெளிவான நிலைப்பாடு

(பிரபாகரன் டிலக்சன்)

என்னை அரசியல் ரீதியாக தாக்க வேண்டும் என ஒரு மதுபானசாலைக்கான சிபாரிசு கடிதத்தை வைத்து அரசியலாக்கிறார்கள். அது என்னை எதுவும் செய்யாது, என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் ‘ஏ–9 வைன்ஸ் ஸ்ரோர்’ எனும் பெயரில் இயங்கும் மதுபானச் சாலைக்கான அனுமதிப் பத்திரம் சி.வி.விக்னேஸ்வரனின் சிபாரிசில் வழங்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில்ஊடகவியலாளர்கள்எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தனுசா நடராசா எனும் அந்தப் பெண் மதுபானசாலை லைசன்ஸ் விண்ணப்பிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிபாரிசு கடிதம் தேவை என என்னிடம் கேட்டார். அவரின் குடும்பத்தை நன்கு அறிந்திருந்ததால் சிபாரிசுக் கடிதத்தையும் வழங்கினேன்.

ஆகவே சிபாரிசுக் கடிதம் கொடுத்தது உண்மை. பலர் பல்வேறு தேவைகளுக்காக சிபாரிசுக் கடிதம் கேட்பார்கள். அவர்களுக்கு வழங்குவதைப் போலவே நான் மதுபானசாலைக்கான சிபாரிசு கடிதத்தையும் கொடுத்திருந்தேன். ஆனால் அதை வைத்து நான் வியாபாரம் செய்யவும் இல்லை. செய்ய வேண்டிய தேவையும் இல்லை.

என்னை அரசியல் ரீதியாக தாக்க வேண்டும் என ஒரு சிபாரிசு கடிதத்தை வைத்து அரசியலாக்கிறார்கள். அது என்னை எதுவும் செய்யாது. – எனத் தெரிவித்தார்.

# ஈ.பி.டி.பி. முன்னாள் எம்.பி. திலீபன் உட்பட மூவருக்கும் வடக்கில் மதுச்சாலை பெர்மிட்!






(ந.லோகதயாளன்)

ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவரும் முன்னாள் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் உள்ளிட்ட மூவருக்கி வடக்கில் மதுபானச்சாலை பெர்மிட்டுகள் வழங்கியமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு மதுபானசாலைகளுக்கான அனுமதியைப் பெற்று வவுனியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான கு.திலீபன் அவற்றைக் கை மாற்றியுள்ளார்.

இந்த இரு மதுபானசாலைகளையும் திறப்பதற்காக பிரதேச செயலகத்திற்கான கட்டணத்தை செலுத்த முயன்றபோதும் பிரதேச செயலகம் அதனை ஏற்க மறுத்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதுக்குடியிருப்பு மற்றும் ஆனந்தபுரம் பகுதிகளில் அமைப்பதற்கான அனுமதிகளே திலீபன் நாடாளுமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இரு அனுமதிப் பத்திரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த இடங்களில் மதுபான சாலைகளைத் திறப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக இடம்பெறுகின்றன எனத் தெரிகின்றது.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதானியான சாகல ரட்ணாயக்காவின் சிபார்சில் வழங்கப்பட்ட ஒரு மதுபானச்சாலைக்கான பெர்மிட்டின் அடிப்படையில் வவுனியா நெடுங்கேணியில் ஒரு பார் அமைக்க முயற்சிக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணிச் சந்தியில் ஓர் மதுபான சாலைக்கான அனுமதி சாகல ரட்ணாயக்க ஊடாக பெறப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாகல ரட்ணாயக்க எழுத்து மூலக் கடிதம் வழங்கியே இந்த மதுபானசாலைக்கான அனுமதி அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

பாலநாயகம் என்னும் பெயரில் இந்த மதுபானசாலைக்காகன அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறிய தந்தையின் மகனான வி.விதுர்சனின் பெயரில் பரந்தன், கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் 2024-06-11 அன்று பணம் செலுத்தப்பட்டு மதுபானச் சாலைக்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.



## ஏற்றுமதிச் செயற்திறன் கடந்த மாதம் அதிகரிப்பு

இலங்கையின் ஏற்றுமதி செயற்திறன் கடந்த மாதம் 1165.4 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

இலங்கை சுங்கத்தினால் வெளியிடப்பட்ட தரவுகளுக்கமைய, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த செயற்திறனானது 4.18 சதவீத வளர்ச்சியாகுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆடை மற்றும் புடவை, தேயிலை, இறப்பர் பொருள்கள், தேங்காய் பொருள்கள், மசாலா பொருள்கள் மற்றும் செறிவூட்டப்பட்ட பொருள்களின் ஏற்றுமதி காரணமாக இவ்வாறானதொரு வளர்ச்சிநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## முதன்மை பணவீக்கம் வீழ்ச்சி அடைந்தது

கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த ஒகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 0.5 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் இந்த மாதத்தில் மறை 0.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.



PMD
ජනාධිපති මාධ්‍ය අංශය
ஜனாதிபதி ஊடகப் பிரிவு
PRESIDENT'S MEDIA DIVISION



# காலிமுகத் திடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை பயன்படுத்தியவர்களின் பட்டியல்

காலிமுகத் திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விசேட அறிக்கையை வெளியிட்டுள்ளது.

மேற்படி வாகனங்கள் முன்னாள் ஜனாதிபதியால் அவரது பதவிக் காலத்தில் தமது தனிப்பட்ட பணிக் குழாத்தினருக்காக வழங்கப்பட்டவை என ஜனாதிபதி ஊடகப்பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் அடங்குகின்றன.

அவ்வாறு வழங்கப்பட்டிருந்த 107 வாகனங்களின் வகைகள் மற்றும் அவற்றை பயன்படுத்திய நபர்கள் தொடர்பான தகவல்கள் என்பன அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**Vehicles Returned From Officers _ 2024.09.21 to 2024.09.24**

| | Vehicle Models | ASSIGNED OFFICER | DESIGNATION |
|---|---|---|---|
| 1 | MERCEDES BENZ 300 | Mr. Saman Ekanayake | Secretary to the President |
| 2 | TOYOTA LAND CRUISER V8 | Mr. Sagala Rathnayake | Chief of staff to the president |
| 3 | TOYOTA LAND CRUISER V8 | Mr. Sarath Kumara | Snr. Add. Secretary |
| 4 | ISUZU D MAX D/CAB | Mr. Asela Ruwan Weerakoon | Snr. Add. Secretary |
| 5 | B.M.W. 520i | Mrs. Deepani Kumarajeewa | Snr. Add. Secretary |
| 6 | MAZDA MAZDA 03 | Mrs. R.M.C.M. Herath | Snr. Add. Secretary |
| 7 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Akila Viraj Kariyawasam | Senior Advisor |
| 8 | NISSAN SYLPHY | Dr. R.H.S. Samarathunge | Senior Advisor |
| 9 | NISSAN SYLPHY | Mr. Sunanda Maddumabandara | Senior Advisor |
| 10 | LAND ROVE DEFENDER 110 | Mr. Wadiwel Suresh | Senior Advisor |
| 11 | NISSAN TEANA | Ms. Priyani Wijesekara | Advisor |
| 12 | TOYOTA LANDCRUISER | Mr. B.M.S. Batagoda | Advisor |
| 13 | TOYOTA LAND CRUISER PRADO | Ms. M.K.B.A.J. Thilakarathne G | Advisor |
| 14 | MAZDA MAZDA 3 | Mr. R. Paskaralingom | Advisor |
| 15 | MAZDA MADZA 03 | Mr. Saman Athaudahetti | Advisor |
| 16 | PEUGEOT 508 | Dr. Ananda Mallawathanthri | Advisor |
| 17 | TOYOTA LAND CRUISER PRADO | Prof. Ashuboda Marasinghe G | Advisor |
| 18 | PORSCHE CAYENNE S | Mrs. Barnadeen Rose Senanayake | Advisor |
| 19 | MITSUBISH I MONTERO | Mr. A.R. Vidanagamage | Advisor |
| 20 | NISSAN PETROL | Mr. P. Harrison | Chief Coordinator |
| 21 | TOYOTA LAND CRUISER V8 | Mr. Dhanushka Ramanayake | DG |
| 22 | LAND ROVE DISCOVERY 4 | Mr. Sugeeshwara Bandara G | DG |
| 23 | B.M.W. 740Li | Mr. Thusitha Halloluwa | DG |
| 24 | TOYOTA COROLLA 171 | Mr. S.A.B. Herath | DG |
| 25 | TOYOTA CAMRY | Mr. S.P Prasanna Shamal Senarath | DG |
| 26 | NISSAN SYLPHY | Mr. Saman Rathnapriya | DG |
| 27 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Rajith Keerthi Thennakoon | DG |
| 28 | MITSUBISHI MONTERO | Dr. Asanga Gunawansha | DG |
| 29 | TOYOTA LANG CRUSER PRADO | Ms. S.D.M. Perera | Private Sec To the President |
| 30 | TOYOTA COROLLA 121 | Mr. P.J.K.S.W. Wickramsinghe | Ombudsman |
| 31 | MITSUBISHI MONTERO | Mr. K.P. Dayarathne | Snr Coordinating Sec |
| 32 | TOYOTA COROLLA 141 | Mrs. Anoma Matharage | Director |
| 33 | NISSAN SUNNY N16 | Mr. H.A.D. Thanuj Thilakarathne | Director |
| 34 | ISUZU D MAX D/CAB | Mr. G.H. Isuru Herath | Director |
| 35 | ISUZU D MAX D/CAB | Mr. Manoj Ranga | Director |
| 36 | ISUZU D MAX D/CAB | Mr. T.H.S.N. Jeewananda | Director |
| 37 | LAND ROVE DEFENDER | Mr. V.S.R. Kodithuwakku | Director |
| 38 | TOYOTA YARIS | Ms. H. Achini Herath | Director |
| 39 | ISUZU D-MAX D/CAB | Mr. D.M. Piyasena G | Director |
| 40 | ISUZU D-MAX D/CAB | Mr. R.A. Waruna Rajapakse | Director |
| 41 | TOYOTA COROLLA | Mr. M.M. Pushpakumara | Director |
| 42 | TOYOTA HILUX | Mr. K.G.S. Madushanka | Director |
| 43 | TOYOTA COROLLA 141 | Mr. A.K.A. Randula | Director |
| 44 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. M.L.D. Theekshana Abeywardane | Director |
| 45 | MITSUBISHI L 200 D/CAB | Mr. Y.R.H. Vidarshana Bandara | Director |
| 46 | MITSUBISHI LANCER | Ms. A.A.S.P Sriyananda | Director |
| 47 | TOYOTA COROLLA 141 | Ms. T.M.G.N.K. Madugalle | Director |
| 48 | ISUZU D-MAX D/CAB | Mr. B.K. Sugath Kumara | Director |
| 49 | TOYOTA YARIS | Mr. L. Ashok Lal Sigera | Director |
| 50 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Nalin Samarakoon | Director |
| 51 | LAND ROVE DEFENDER 110 | Mr. R.P. Priyantha Kumara | Director |
| 52 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Tharindu Kaldera | Director |
| 53 | MITSUBISHI MONTERO | Mr. Shanuka Karunarathne G | Director |
| 54 | TOYOTA LANDCRUISER | Mr. Meesha Gunawardane | Director |
| 55 | ISUZU D-MAX D/CAB | Mr. W.L. Pradeep Suranga | Director |
| 56 | NISSAN SUNNY SUPER SALOON | Mr. H.M.U. Kumarathunga | Director |
| 57 | TOYOTA LAND CRUISER | Mr. W.M.K Wijayabandara | Director |
| 58 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Sajana SooriyaarachchiG | Coordinating Director |
| 59 | TOYOTA LAND CRUISER | Mr. W.D. Pathum Pathirana | Coordinating Director |
| 60 | MITSUBISHI MONTERO | Mr. P.S. Lakmal | Coordinating Director |
| 61 | MAZDA MAZDA 3 | Mr. Palitha Wickramage | PS to Secretary to the President |
| 62 | FORD EVEREST | Mr. Sunil Ramyawansha Magammana | Coordinating Secretary |
| 63 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. G.K.L.S. Rajadasa | Coordinating Secretary |
| 64 | NISSAN SYLPHY | Mr. P.W. Walikala | Coordinating Secretary |
| 65 | HYUNDAI TERRACAN | Mr. N.K.G Rajapaksha | Coordinating Secretary |
| 66 | TOYOTA LAND CRUISER | Mr. W.C.A. Fernando | Coordinating Secretary |
| 67 | NISSAN SYLPHY | Mr. Sujith Akkarawatte | Coordinating Secretary |
| 68 | FORD EVEREST | Mr. Sunil Premasiri | Coordinating Secretary |
| 69 | LAND ROVER DISCOVERY 4 | Mr. Senthil Thondaman | Governor |
| 70 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Mahindananda Aluthgamage | Member of the Parliament |
| 71 | MICRO SSANOYON G REXTON 2L | Mr. Wimalaweera Dissanayake | Member of the Parliament |
| 72 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Milan Jayathilake | Member of the Parliament |
| 73 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Nimal Piyathissa | Member of the Parliament |
| 74 | MICRO REXTON JEEP | Mr. Udayana Kidindigoda | Member of the Parliament |
| 75 | MITSUBISH I L 200 D/ CAB | Mr. Jagath Priyankara | Member of the Parliament |
| 76 | TOYOTA LAND CRUISER PRADO | Ms. Kokila Gunawardana | Member of the Parliament |
| 77 | MITSUBISH I MONTERO | Mrs. Manjula Dissanayake | Member of the Parliament |
| 78 | TOYOTA HILUX | M. Rameshwaran | Member of the Parliament |
| 79 | MITSUBISH I L200 | Mr. Sudath Manjula | Member of the Parliament |
| 80 | TOYOTA HILUX | Ms. Rajika Wickramasinghe | Member of the Parliament |
| 81 | TOYOTA HILUX | Mr. Chinthaka Mayadunne | Member of the Parliament |
| 82 | TOYOTA LAND CRUISER V8 | Mr. Priyankara Jayarathne | Member of the Parliament |
| 83 | TOYOTA HILUX | Mr. Gunathilake Rajapakse | Member of the Parliament |
| 84 | TOYOTA LAND CRUISER PRADO | Mr. Duglas Devananda | Member of the Parliament |
| 85 | TOYOTA LAND CRUISER V8 | Mrs. Diana Gamage | Member of the Parliament |
| 86 | MAZDA MAZDA 6 | Mr. Pradeep Undugoda | Member of the Parliament |
| 87 | TOYOTA LAND CRUISER V8 | Mr. S.M. Chandrasena | Member of the Parliament |
| 88 | MITSUBISH I MONTERO | Mr. Madura Vithanage | Member of the Parliament |
| 89 | MITSUBISH I L 200 D/ CAB | Mr. S. M.M. Musharaff | Member of the Parliament |
| 90 | LAND ROVER DISCOVERY 5 | Major Sudarshana Denipitiya | Member of the Parliament |

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

| | | | |
|---|---|---|---|
| 91 | MITSUBISH I L 200 D/ CAB | Mr. Sampath Athukorala | Member of the Parliament |
| 92 | NISSAN BLUE BIRD SYLPHY | Mr. Weerasena Gamage | Member of the Parliament |
| 93 | TOYOTA HILUX | Ms. Muditha Prasanthi De Soyza | Member of the Parliament |
| 94 | TOYOTA HILUX | Mr. Ranjith Bandra | Member of the Parliament |
| 95 | TOYOTA HILUX | Mr. Udaya Shantha Gunasekara | Member of the Parliament |
| 96 | TOYOTA LAND CRUISER V8 | Mr. S.B. Dissanayake | Member of the Parliament |
| 97 | TOYOTA HILUX | Mr. Asanka Nawarathne | Member of the Parliament |
| 98 | TOYOTA HILUX | Mr. Gayashan Nawanandana | Member of the Parliament |
| 99 | LAND ROVER DISCOVERY 4 | Mr. Gamini Lokuge | Member of the Parliament |
| 100 | TOYOTA HILUX | Mr. Upul Mahendra Rajapaksha | Member of the Parliament |
| 101 | BENZ S 300 HYBRID | Ms. Seetha Arambepola | Member of the Parliament |
| 102 | TOYOTA HILUX | Mr. Kapila Athukorala | Member of the Parliament |
| 103 | TOYOTA HILUX | Mr. Vijitha Berugoda | Member of the Parliament |
| 104 | MAZDA MAZDA 6 | Mr. Jayantha Katagoda | Member of the Parliament |
| 105 | MAZDA MAZDA 6 | Mr. Ajith Rajapaksha | Member of the Parliament |
| 106 | MAZDA MAZDA 6 | Mr. S.C. Mithukumarana | Member of the Parliament |
| 107 | TOYOTA COROLLA 141 | Mr. Sahan Pradeep Vithana | Member of the Parliament |



## புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான சிக்கலுக்குத் தீர்வு கோரி ஆர்ப்பாட்டம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்குமாறு கோரி பெற்றோர்கள் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

பிரதான ஆர்ப்பாட்டம் கல்வி அமைச்சுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வெளியானதாக கூறப்படும் முதலாம் வினாத்தாளின் 3 வினாக்களுக்காக அனைத்து மாணவர்களுக்கும் புள்ளிகளை வழங்க தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

எனினும், இந்த தீர்மானத்தில் திருப்தி அடையமுடியாது என தெரிவித்து பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர கருத்து தெரிவிக்கையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர்களில்சிலருக்குகலந்துரையாடுவதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படுமெனக் குறிப்பிட்டார்.




## பொதுத் தேர்தல் தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் அச்சிடும் நடவடிக்கை நிறைவு

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை அச்சிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

10 லட்சம் விண்ணப்பங்கள் அச்சிடப்பட்டுள்ளன என அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தபால் மூல விண்ணப்பங்களின் ஒருபகுதி தேர்தல் ஆணைக்குழுவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய விண்ணப்பங்கள் நேற்று கையளிக்கப்பட்டன.

இதனிடையே, 2024 பொதுத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகவுள்ளது.

## சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்களை நாட்டிற்குள் கொண்டுவந்த பெண் கைது



சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட்களை நாட்டிற்கு கொண்டுவந்த பெண் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்வேறு வகைகளை சேர்ந்த 36,800 சிகரெட்கள் அடங்கிய 184 பொதிகள் அந்தப் பெண்ணிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன எனவும் அவற்றின் பெறுமதி 55லட்சத்து 20 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜா-எல பகுதியைச் சேர்ந்த 34 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



# இலங்கை மீனவர்களின் படகு சர்வதேச கடற்பரப்பில் விபத்து

இலங்கை மீனவர்கள் 05 பேருடன் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற படகொன்று சர்வதேசக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகிருப்பதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

ஐந்து இலங்கை மீனவர்களும் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்திலிருந்து "ரன்முத்து துவ 10" எனும் மீன்பிடிப் படகில் கடந்த 12 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்றனர் எனவும் அந்த படகு கடந்த 26ஆம் திகதி விபத்துக்குள்ளானதானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான படகு தற்போது இந்திய கடற்பரப்பில் மிதந்து கொண்டு இருப்பதாக படகின் உரிமையாளருக்கு மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான படகில் இருக்கும் மீனவர்களுக்கு உதவுவதற்காக மற்றுமொரு படகை அனுப்பியுள்ளதாக படகின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை கடற்படை மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஊடாக இந்திய கடலோரப் பாதுகாப்பு படைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.



## புதிய அமைச்சரவை நேற்று முதல் தடவையாகக் கூடியது

புதிய அமைச்சரவை முதன் முறையாக நேற்று கூடியது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவை கூட்டம் இடம்பெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் அமைச்சரவையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் போது சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று அறிவித்திருந்தது.

## லைபனான் - சிரியாவுக்குச் செல்ல வேண்டாம் அறிவுறுத்துகின்றது வெளிவிவகார அமைச்சு!

இலங்கை மக்கள் மறு அறிவித்தல் வரை லைபனான் மற்றும் சிரியாவுக்குச் செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்த அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

லைபனான் மற்றும் சிரியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்திய உயர்ஸ்தானிகருடன் சந்திப்பு

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திற்கும், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான பரந்த ஒத்துழைப்பு தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், இருநாடுகளினதும் கலாசார நட்புறவுக்கு மேலும் வலுசேர்க்கும் வழிமுறைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம் தமது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 01.10.2024




திறமையான முறையில் செயலாற்ற உங்களுக்கு பொறுமையும் உறுதியும் தேவை.

பணி செய்வதற்கான திறமை உங்களிடம் காணப்படும் போதிலும் சிறந்த திட்டமிடல் இல்லாத காரணத்தால் அதனை நீங்கள் வெளிப்படுத்த இயலாது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

குடும்பத்துடன் அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம்.குடும்பத்தின் அமைதி சூழலை கெடுக்கும் வகையில் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்ப உறுப்பினர்களின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உடல் நலத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.




ஒரு சாதகமான நாள் உங்கள் முன் இருக்கின்றது. இன்று அமைதியான மனநிலையுடன் காணப்படுவதால் முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். இன்று மாற்றங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு நன்மையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை உங்களுக்கு மனஅழுத்தத்தை உண்டாக்கும். உங்கள் பணியின் தரம் குறைவாக இருக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு காணப்படும். குடும்பத்தாருடன் இனிமையாகப் பேசி பழகுவீர்கள்.

பணம் அதிகமாக காணப்படும். பயனுள்ள நோக்கங்களுக்காக பணத்தை செலவுசெய்வீர்கள்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.தியானம் மேற்கொள்வது உங்களுக்கு மிகவும் நல்லது.




இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும். இன்று சில பொறுப்புகளை உங்களால் செய்ய முடியாமல் போகலாம்.

நீங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உணர்ச்சிவசப்படுவதன் காரணமாக தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும். எனவே நல்லுறவை தக்க வைக்க கவனமாக இருக்க வேண்டும்.

பணஇழப்பிற்கு வாய்ப்பிருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். தொண்டை வலி அல்லது கண்களில் எரிச்சல் ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் பணிகளில் தாமதம் ஏற்படும். பணிகள் சுமுகமாக நடைபெற நீங்கள் மிகுந்த கவனத்துடன் செயல்படவேண்டும்.

குடும்ப வட்டாரத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தைத் தரும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கும் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கும் உகந்த நாள்.ஸ்திரமான நாளாக அமையும்.

இன்றைய நாள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று அர்ப்பணிப்புடன் செயல்படுவீர்கள் உங்கள் நலன் பெருகும். இன்று பயணங்கள் காணப்படும்.

இன்று பணிச்சூழல் நன்றாக இருக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளை மதிப்பிடுவார்கள்.

இன்றைய தினம் காதலுக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் மகிழ்ச்சியைத் தேடுவீர்கள்.

இன்று பண இழப்பிற்கு வாய்ப்பு உள்ளது. அதனால் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சளி இருமல் போன்ற உபாதைகளுக்கு ஆளாக நேரலாம்.




இன்று உங்கள் எண்ணங்கள் ஈடேறும். இன்று அதிர்ஷ்டங்களை சந்திப்பீர்கள்.

பணியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களின் சிறந்த பணி காரணமாக பதவி உயர்விற்கான வாய்ப்பு உள்ளது.

பெரியவர்களிடமிருந்து இன்று அறிவுரை ஒன்றை கேட்க நேரும். நல்லுறவிற்கு அது பயனளிக்கும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும்.

இன்று நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். ஆன்மீக நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை.

உங்கள் சகபணியாளர்கள் மற்றும் கீழ்பணிபுரிபவர்களின் ஆதரவு உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் மற்றும் நற்பெயர் கிடைக்கும்.

குடும்ப அங்கத்தினர்களிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். மோதல்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணத்தை கையாள்வதில் கவனம் தேவை. அலட்சியமாக இருந்தால் பணஇழப்பு ஏற்படும்.

ஆரோக்கியம் குறைந்து காணப்படும். உங்கள் உணவில் கவனம் செலுத்துங்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்த்துவிடுங்கள்.




இன்றையநாள் சமநிலையுடன் காணப்படும். உங்கள் அணுகுமுறை மூலம் நீங்கள் புதிய தொடர்புகளை பெறுவீர்கள்.

இன்றை பணியின் மூலம் நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள். இது உங்கள் தகுதியை நிரூபித்துக் காட்டும்.

உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். நண்பர்கள் உங்களுக்கு நல்லாதரவு தருவார்கள்.

இன்று நிதிவளர்ச்சி நன்றாக இருக்கும். உங்கள் நண்பர்களின் பிறந்த நாள் போன்ற விசேஷங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.10.2024




இன்றைய நாளில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழும். முயற்சிகளை சார்ந்து செயல்படுவது நல்லது.

பணியிடத்தில் நற்பெயரைப்பெறுவீர்கள். விரும்பி பணியாற்றுவீர்கள்.

குடும்பத்தாருடன் நல்லுறவு பராமரிப்பதற்கு உகந்த நாள். காதல் ஜோடிகள் இன்று பரஸ்பர ஒற்றுமையுடன் இருப்பார்கள்.

எதிர்பாராத வகையில் பணவரவு காணப்படும். பூர்வீகச் சொத்து, காப்பீடு அல்லது லாட்டரி மூலம் பணம் கிடைக்கலாம்.

இன்றைய நாள் நல்ல ஆரோக்கியத்தை நீங்கள் அனுபவிப்பதற்கு உதவியாக இருக்கும். நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரே விஷயம்– நீங்கள் உண்ணும் உணவு முறைகள்




இன்றைய நாளை சாதகமாக்கிக் கொள்ள நீங்கள் மிகவும் முயற்சி எடுப்பீர்கள். உங்கள் மனது அமைதியாக இருக்கும். உங்கள் இலக்கில் கவனம் செலுத்த இயலும்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும். உங்கள் பொறுப்புகளை முறையாக ஆற்றுவீர்கள்.

நல்ல சுமுகமான உறவுமுறை காணப்படும். உறவுப் பிணைப்பின் மதிப்பை நீங்கள் உணர்வீர்கள்.

குடும்பத்தில் விசேஷங்கள் நடக்க வாய்ப்பு உள்ளது. அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் அமைதியான மனநிலை காரணமாக மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று அன்பும் ஆர்வமும் நிறைந்திருக்கும். நல்ல பாடல்களைக் கேட்டு மகிழுங்கள். விளையாட்டில் நேரத்தை கழியுங்கள்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. அனுசரித்து நடந்து கொண்டால் உங்கள் பணிகள் பாதிக்காது.

காதலுக்கு உகந்த நாள்.காதல் ஜோடிகள் உறவில் ஒற்றுமை கண்டு மகிழ்வார்கள்.

நிதி விஷயங்களில் வளர்ச்சி காணப்படும்.பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் நல்ல லாபம் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். சுய வளர்ச்சிக்காக தொடர்ந்து முயன்றால் இன்று வெற்றிகரமான நாளாக ஆக்கலாம்.

பணியில் பலன்கள் கலந்து காணப்படும். ஏற்ற இறக்கங்கள் காணப்படும். மேலதிகாரிகள் மற்றும் சகபணியாளர்களுடன் உறவாடும் பொழுது கவனமுடன் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் முன்னேற்றமும் வளர்ச்சியும் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். உடன்பிறந்தோரின் ஆதரவு கிடைப்பதற்கு சாத்தியம் உள்ளது.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள். இன்று நிதி சம்பந்தமாக முக்கியமான முடிவுகளை எடுப்பது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தின் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

